

நேற்று (13.10.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டு வரும் விக்டோரியா பொது அரங்கத்தினை பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், மேயர் ஆர்.பிரியா, ஜெ. குமரகுருபரன், வி. சிவ கிருஷ்ணமூர்த்தி, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.46 கோடியே 46 லட்சத்தில்

# மன்னார்குடியில் பிரமாண்ட புதிய நவீன பேருந்து நிலையம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – டி.ஆர்.பி.ராஜா திறந்துவைத்தனர்!

திருவாரூர், அக்.14–

முதலமைச்சர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, மன்னார்குடி நகராட்சியில், ரூ.46 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டில் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்தார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், ச.முரசொலி எம்.பி., சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், அறங்காவலர் குழு தலைவர் கருடா இளவரசன், நகர்மன்றத் தலைவர் மன்னை.த.சோழராஜன், நகரச் செயலாளர் வீரா.கணேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணிதுணை செயலாளர் அழகுதிருராஜா, வர்த்தகர் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

50 பேருந்து நிறுத்தம் தடங்களுடன், உணவகங்கள், கழிவறை வசதி, டிக்கெட் புக்கிங் கவுண்டர், ஏ.டி.டிம். அறை, டைம் கீப்பிங் ஆபிஸ், காவல் துறை அறை, நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம், இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:–

மன்னார்குடி நகராட்சியில், ரூ.46 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டில் பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மக்களோடு மக்களாக எவ்வாறு பணியாற்ற வேண்டுமென முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எங்களை வழி நடத்தியுள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்; அளித்த நிதியாலே தமிழ்நாட்டில் நகராட்சித்துறையின் கீழ் மழைநீர் வடிகால் பணிகள், பாதாள சாக்கடை திட்டம், எல்இடி தெருவிளக்கு உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் 22 பணிகள்!**

மன்னார்குடியில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 09 எண்ணிக்கையில் ரூ.9.71 கோடி மதிப்பீட்டிலும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 15 பணிகள் ரூ.1.51 கோடி மதிப்பீட்டிலும், 15–வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் 32 பணிகள் ரூ.4.99 கோடி மதிப்பீட்டிலும், தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் 1 பணிகள் ரூ.70 லட்சம் மதிப்பீட்டிலும், மாநில பேரிடர் மீட்பு நிதி திட்டத்தின் கீழ் 4 பணி ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும், அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.32 லட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்ட ஒருங்கிணைந்த சமையல் கூடம் பொது நிதியின் கீழ் ரூ.23 லட்சம் மதிப்பீட்டிலும், வட்டி நிதி 1 பணி ரூ.0.85 கோடி மதிப்பீட்டிலும், சேமிப்பு மற்றும் வட்டி நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.0.87 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.1.73 கோடி மதிப்பீட்டிலும், எஸ்.எப்.சி பள்ளி இப்புரூமென்ட் கிராண்ட் – இன்போராஸ்டெரக்சர் பணிகள் 8 பணிகள் ரூ.1.69 கோடி மதிப்பீட்டிலும், எஸ்.எப்.சி அரியர் பண்ட் 3 பணிகள் ரூ.0.84 கோடி மதிப்பீட்டிலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் 3.634 கிலோமீட்டர் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் 22 பணிகளும் முடிவுற்றுள் ளது.

மன்னார்குடியில் இன்ப்ராஸ்டராக்சர் மற்றும் அமினிடீஸ் நிதி 1 பணிகள் ரூ.26.76 கோடி மதிப்பீட்டிலும், எஸ்எப்சி இன்சன்டீவ் பண்ட் 4 பணி ரூ.30 கோடியே 49 லட்சம் மதிப்பீட்டிலும், கே.எப்.டப்ள்யூ பவுண்டீங் அன்டர் எஸ்எப்ஜஎப்டீஎன் ஜஜஜ 1 பணி ரூ.229 கோடி மதிப்பீட்டிலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் 8 பணிகள் ரூ.7.04 கோடி மதிப்பீட்டிலும், 15–வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் 6 பணிகள் ரூ.4.19 கோடி மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 1 பணி ரூ.2.29 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.2.3 கோடி மதிப்பீட்டிலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 1 பணி ரூ.0.15 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்றுவருகிறது.

**ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் அணுகுசாலை – தடுப்புச் சுவர் பணி!**

மேலும், மன்னார்குடியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2025–26 புதுப்பாலம் அருகில் அணுகு சாலை மற்றும் மேற்கு புறத்தில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது.

இந்நகராட்சி பகுதிகளில் சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்பட்டத்தில் பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பிக்கும் பணி ரூ.12.76 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. பள்ளி மேம்பாட்டு நிதியின் கீழ் நகராட்சிக்குட்பட்ட மன்னை நகர் சுக்கான் குளம் அங்கன்வாடி கட்டடம் கட்டும் பணி ரூ.0.16 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட 74 குளங்களையும் கால்வாய்கள் மூலம் ஒருங்கிணைக்கும் பணி ரூ.155.00 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. ரூ.500 கோடிக்கு மேலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள் என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில், கும்பகோணம், திருப்பூர், ஈரோடு, எளவனூர், நாகப்பட்டினம் ஆகிய வழித்தட பேருந்துகளை அமைச்சர்கள் கே.என். நேரு, முனைவர். டி.ஆர்.பி.ராஜா கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

### இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.12.93 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, அக்.14-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.12.93 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை நேற்று (13.10.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு-57க்குட்பட்ட வால் டாக்ஸ் சாலை, வ.உ.சி. தெருவில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடக் கட்டுமானப் பணி மற்றும் சென்னை மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டடப் பணி, வார்டு-54க்குட்பட்ட அம்மன் கோவில் தெரு, சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டடப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின் போது, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கே.கருணாகரன், வி.பார்த்தசாரதி, எஸ்.பாலாஜி, சி.மூர்த்தி, எஸ்.பாரதி, பி.மாறன் முன்னிலையில்

# மாதவரம் 17வது வட்டத்தில் தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுனர் சங்க ஆண்டு விழா!

## புழல் எம்.நாராயணன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

சென்னை, அக்.14-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டத்தில் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் சார்பில் பெயர் பலகை திறந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதி அமைந்துள்ள தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுநர் சங்க பெயர் பலகை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சங்கத் தலைவர் எஸ். பாரதி தலைமையில் நடைபெற்றது.

17 வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வட்ட நிர்வாகிகள் வி.பார்த்தசாரதி, எஸ்.பாலாஜி, சி.மூர்த்தி, ஆகியோர் வரவேற்றனர்.

ஆட்டோ ஓட்டுனர் சங்க நிர்வாகிகள் பி. மாறன், டி .பிரதீப், சங்கர், எஸ்.ராஜேஷ், உறுப்பினர்கள் டீ.சந்திரசேகர், கே.ஆனந்தன் ,பி.வெங்கடேசன், எம்.ஏழுமலை, டி .ராஜு, எம்.இளையராஜா, கே.ரகுமான், டி.ஞானவேல், டீ.டேவிட், ஏ.மாரிமுத்து, ஜி.ராஜ்குமார், ஆர். ரஞ்சித், எஸ்.நாகராஜ், கே.லட்சுமி காந்த், எஸ். சதீஷ், டி.தினேஷ், ஜெ. இளையபெருமாள், ஜி.நாகராஜ், டி.ஸ்டாலின், ஜே. அருண் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு சங்க பெயர் பலகை திறந்து வைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.



மாதவரம் வடக்கு பகுதி 17 ஆவது வட்டம் வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதியில் அமைந்துள்ள தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுனர் சங்க பெயர் பலகையை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் திறந்து வைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வி. பார்த்தசாரதி, எஸ். பாலாஜி, சி. மூர்த்தி, சங்க நிர்வாகிகள் பாரதி, மாறன், பிரதீப், சங்கர், ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், ஈரோடு மாவட்டம், சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக 6.70 கோடி ரூபாய் மதிப்பில் 4 கிலோமீட்டர் தூரத்திற்கு சீரமைக்கப்பட்ட தார்சாலை, பசுமடம் மற்றும் பக்தர்கள் காத்திருப்பு கூடம் ஆகியவற்றை காணொலி காட்சி வாயிலாக நேற்று (13.10.2025) திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நாடாளுமன்ற உறுப்பினர் கே இ. பிரகாஷ் ஆகியோர் மலைப்பாதையில் பயணித்து பொதுமக்களுக்கு சாலையை அர்ப்பணித்தனர். இந்நிகழ்ச்சியில் சென்னிமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ப செங்கோட்டையன், மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ் ஆர் செல்வம், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.பிரபு, நகர செயலாளர் எஸ்.எம்.ராமசாமி, காயத்ரி இளங்கோ, கொடுமணல் கோபால், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சதீஷ் (எ) பொ சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு பெயர் நிலைத்திருக்கும் வரை

# தியாகி சங்கரலிங்கனாரும் நினைவுகூரப்படுவார்!

## நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, அக்.14 - விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சங்கரலிங்கனார் நினைவுநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



விடுதலைப் போராட்ட வீரர் தமிழ்நாடு என்ற பெயரை நம் மாநிலம் பெறுவதற்காக 76 நாட்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த வீரத்தியாகி சங்கரலிங்கனார் நினைவு நாள்!

அவர் உறுதியாகப் போராடி உயிர்துறந்தும் நிறைவேறாத தமிழினத்தின் பெருங்கனவு, பேரறிஞர் அண்ணா தலைமையிலான கழக ஆட்சி அமைந்த பின்னரே நனவானது.

தமிழ்நாடு எனும் பெயர் இம்மண்ணில் நிலைத்திருக்கும் வரை சங்கரலிங்கனாரும் நன்றியோடு நினைவு கூரப்படுவார்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### 14 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

# ‘ஃபாக்ஸ்கான்’ நிறுவனம் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்!

சென்னை, அக். 14 -

தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 15ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, இதன் மூலம், 14 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாக்ஸ்கானின் இந்திய பிரதிநிதி ராபர்ட் வூ சந்தித்ததை குறிப்பி ட்டுள்ளார். மின்னணுவியல் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் துறைக்கு மற்றொரு பெரிய ஊக்கமாக ஃபாக்ஸ்கான் நிறுவனம் திகழ்கிறது என்றும், அந்நிறுவனம் ஏஐ தொழில்நுட்பம் அடிப்படையிலான உற்பத்தியை தமிழ்நாட்டில் தொடங்கவுள்ளதை உறுதி செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஃபாக்ஸ்கான் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதன் மூலம்14 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை இல்லாத அளவிற்கு மிகப்பெரிய பொறியியல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், திராவிட மாடல் 2.0விற்கு களம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

# வருவாய்த் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்!

சென்னை, அக்.14-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமசந்திரன் நேற்று (13.10.2025) சென்னை-5, சேப்பாக்கம் சர்வே இல்லத்தில் அமைந்துள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில் பல்வேறு சேவைகளை தொடங்கி வைத்தார். மேலும், உயர் அலுவலர்களுக்கு 10 ஈப்பு மற்றும் இத்துறையில் பணிபுரிந்து காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கியும், இணையவழி பட்டா மாறுதல் சேவையினை கண்காணித்து அதன் தரத்தினை உயர்த்திட தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையத்தினை துவக்கி வைத்தார்.

இணையவழி பட்டா மாறுதல் மற்றும் புல எல்லைகளை அளவீடு செய்தல் போன்ற சேவைகளை கண்காணிக்கும் தரக்கட்டுப்பாடு மையம்:

நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு, ‘தமிழ் நிலம்’ எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக, இணையவழி பட்டா மாறுதல், புல எல்லை அளவீடு, வரைபட விற்பனை போன்ற பல சேவைகளை நில அளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை பொதுமக்களுக்கு இணையவழியில் வழங்கி வருகிறது.

இச்சேவைகளை கூர்ந்து கண்காணித்து அவற்றின் தரத்தினை பேணும் பொருட்டு, ‘தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் ஒன்று நில அளவை இணை இயக்குநர் (மத்திய நில அளவை அலுவலகம்) தலைமையில் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் மூலம் இணையவழிச் சேவைகளின் புள்ளி விவரங்களை கண்காணிக்கும் வகையில், ‘Dashboard’ உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் இணையவழி பட்டா மாறுதல் மற்றும் புல எல்லை மனுக்கள் போன்ற இணையவழிச் சேவைகள் விரைவாகவும், செம்மையாகவும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

**கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்:**

தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் பல்வேறு இனங்களில் பணிபுரிந்து, பணியின்போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சென்னை, கரூர், திருச்சிராப்பள்ளி, இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், கடலூர் ஆகிய 7 மாவட்டங்களை சார்ந்த 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இத்துறையில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை அலுவலர்களுக்கு ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் வழங்குதல்:**

தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் பணிபுரிந்து வரும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர், மதுரை மண்டலத் துணை இயக்குநர் மற்றும் ஈரோடு, திருவாரூர். புதுக்கோட்டை, நீலகிரி, காஞ்சிபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த உதவி இயக்குநர்களுக்கு அவர்களது பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ, 85 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டங்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின்போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை திருமதி. பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் முனைவர் கே.எஸ். பழனிச்சாமி , நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் தீபக் ஜேக்கப், கூடுதல் இயக்குநர் (மறு நில அளவை) மு.வெங்கடேசன், இணை இயக்குநர் வ.சரவணன் மற்றும் இத்துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# மாற்றுக் கட்சியினர் 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில்

கிருஷ்ணகிரி, அக்.14-

கிருஷ்ணகிரி மேற்கு நகர தி.மு.க. சார்பில் பல்வேறு மாற்று கட்சிகளை சேர்ந்த 200-க்கும் மேற்பட்டவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் மாற்று கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர். அவர்களை சால்வை , கட்சி துண்டு அணிவித்து மாவட்டச் செயலாளர் மதியழகன் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசும்போது மாற்று கட்சிகளில் இருந்து விலகி இன்று தி.மு.க.வில் இணைந்துள்ளீர்கள். உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். அரசின் நான்கரை ஆண்டு சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம், தமிழ் புதல்வன், புதுமைப்பெண் உள்பட எண்ணற்ற திட்டங்களை மக்களுக்காக தந்தவர் திராவிட மாடல் பேரரசர் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள்

2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற வேண்டும். சிறப்பாக பணியாற்றக் கூடிய அனைவருக்கும் பொறுப்புகள் நிச்சயம் தேடி வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் பி.டி. அன்பரசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.




கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.108, சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற Chetpet Big Bash League Season 2.0 கிரிக்கெட் போட்டி பரிசளிப்பு விழாவில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற அணிகள் மற்றும் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்குப் பரிசுத் தொகை மற்றும் கோப்பைகளை வழங்கினார். இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் உடனிருந்தார்.